செய்யவேண்டுமென்று. அந்த அடிப்படையிலே நேற்று மாலை 6¼ மணிக்கு திரு. தாமரைக்கனி அவர்கள் அப்போலோ மருத்துவமனையிலேயிருந்து கைது செய்யப்பட்டு, சென்னை பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே ஏராளமான மருத்துவர்களை வைத்து அவர் உடல் முழுவதும் பரிசோதனை செய்து, அதற்குப் பிறகு என்னுடைய அடுத்த உத்தரவின் அடிப்படையில் சென்னை மத்திய சிறையிலே அடைக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(ஆ) பேரவையில் 22.3.1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, நேற்று நடந்த அசம்பாவிதங்களை உறுப்பினர்கள் மட்டுமல்ல, இங்கே வந்திருந்த பார்வையாளர்கள், அரசு அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் எல்லோரும் பார்த்திருப்பார்கள். நியாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற காரணத்தால், நடவடிக்கைகளை இரண்டாகப் பிரித்துத்தான் செய்திருக்கிறோம். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்குத் தர இருக்கின்ற நேரத்தில் வெளிநடப்பு செய்ய முயற்சித்த நேரத்தில், அவர்களாகவே வெளிநடப்பு செய்யலாம் என்று சொன்னேன். அதையும் மீறி அவர்கள் இங்கேயே இருந்து, அதற்குப் பிறகு என்னுடைய உத்தரவின்பேரில் இங்கேயிருக்கிற காவலர்கள் அவர்களை வெளியேற்றினார்கள். ஆனால், அதற்கு அடுத்த நாளே சொன்னேன்; இது முதல் முறையானது; இரண்டாவது முறையென்றால், கூட்டத் தொடர் முழுவதற்கும் வெளியேற்ற வேண்டுமென்று விதி இருக்கிறது என்று. அதைப்போலவே, நேற்று திரு. தாமரைக்கனி அவர்களும், திரு. கருப்பசாமி அவர்களும் இந்த அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலே நடந்து கொண்டார்கள். ஒட்டுமொத்தமாக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, ஒருமனதாக அந்தத் தீர்மானம் நிறைவேறி, அவர்கள் இருவருமே இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் இந்த அவையைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

முற்பகல் 10-55

அதோடு இன்னொரு கருத்தையும் செல்கிறேன். விடுதியிலே அவர்கள் இருக்கக்கூடாது என்ற உத்தரவையும் போட்டேன். அதற்கு

1999 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

ஒரு முக்கியமான காரணம் உண்டு. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களுக்கு ஒரு வாரகால தண்டனை கொடுக்கும்போது, என்னை இதோடு 7, 8 முறை தொடர்பு கொண்டு அங்கே யாரோ வந்து அச்சுறுத்துவதாக, தொலைபேசியின் மூலமாக அச்சுறுத்துவதாக, நேரிலே வந்து அச்சுறுத்துவதாக எல்லாம் சொன்னார்கள். உடனடியாக காவல் துறை ஆணையரிடம் சொல்லி அங்கே காவலுக்கு ஆள் போட வேண்டும் என்று சொன்னேன். அப்படிப்பட்ட எந்த நிகழ்வும் நடக்கக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் அவர்கள் இருவருமே அங்கே இருக்கக்கூடாது என்று சொன்னேன். ஆனால் அதிலேகூட ஒரு மாலைப் பத்திரிகையில் அவர்கள் இருவர் அறையும் பூட்டப்பட்டது என்று ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். உறுப்பினர் கருப்பசாமியின் அறை அவராலேயே பூட்டப்பட்டிருந்தது. இன்னொரு பூட்டு என்னுடைய உத்தரவின்பேரில் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அறையில் அவர்கள் துணைவியார் இருந்தார்கள். அவர்களே இந்தச் சம்பவங்கள் குறித்து தனக்கு, தன்னுடைய கணவர் மூலமாகத் தகவல் தெரிந்தது என்றும் இன்று காலையிலே அவர்களாகவே ஊர் செல்வதாகவும் சொன்னார்கள். இந்தத் தகவலை எனக்குச் சொன்னவுடன் நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டு, முதலமைச்சர் அறிவுரையின்பேரில் அங்கே அவர்களை ஒன்றும் செய்யக்கூடாது என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், நேற்று இரவு முழுவதும் அந்த அம்மையாருக்குப் பாதுகாப்பாக காவல் இருக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தேன் அவர்கள் அந்த அறையிலேதான் இருக்கிறார்கள். ஒருவேளை இன்று காலை அந்த அறையை காலி செய்து இருக்கலாம். ஆகவே, தாமரைக்கனி அவர்களுக்கும், கருப்பசாமி அவர்களுக்கும் இந்த அவை நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் இது ஒரு நடவடிக்கை.

இங்கே எல்லாக் கட்சி உறுப்பினர்களும், எல்லாக் கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நேற்று தாமரைக்கனி அவர்கள் செய்தது ஒரு criminal குற்றம், மாண்புமிகு திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கு. படுகாயம் ஏற்படுத்தினார். ஆகவே, அவர் மீது மட்டும் தனியாக நடவடிக்கை எடுப்பதற்காகத்தான், காவல் துறைக்கு, அவரைக் கைது செய்யச் சொல்லி உத்தரவிட்டேன். தொடர்ந்து அடுத்த நடவடிக்கை என்ன என்பதை இந்த அவை முடிவு செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக நேற்றையதினம் அவர் கைது செய்யப்பட்டார், ஒரு வாரம் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறேன்.